The 2nd procession carrying the portrait of the Holy Mother headed by Swami Jivanananda, commenced near the Batticaloa Public Library and took the following route: lake side of the Mahatma Gandhi Road, Munai Street, passing the C.T.B. bus–stand, Lake Road No:01, Nalliah Road, Hospital Road to Anaipanthy.

The 3rd procession started at the Mariamman Temple, Koddaimunai carrying the portrait of Swami Vivekananda, led by Swami Ajaratmananda. It proceeded through Arasady Junction, Bar Road, Trinco Road, Koddaimunai Bridge, Central Road, Hospital Road, Mudaliyar Street, Maruthady Street, Adigar Road, Hospital Road and reached the venue of the meeting.

The three processions converged at the Anaipanthy Pillaiyar Temple before entering the Hall. The meeting was presided over by Swami Atmaghanananda, Vice-President, Ramakrishna Mission (Ceylon Branch). Mrs. Valli Somasundaram, Principal, Vivekananda Girls' Maha Vidyalaya, Anaipanthy welcomed the audience. Swami Jivanananda gave the benedictory address. Swami Ajaratmananda delivered the Centenary Memorial Speech.

On 07.05.1997 the Centenary Celebrations took place at Shivananda Vidyalaya under the Presidentship of the Principal, Mr. N. Rajaratnam. Swami Jivanananda gave his blessings; Swami Atmaghanananda was the Guest Speaker.

On 08.05.1997 in Karaitivu, there was a procession starting from Shanmuga Vidyalaya, passing through Kandasamy Temple Road, Central Road, Sarada Vidyalaya Road and ending at Ramakrishna Mission Boys' School. A public meeting was presided over by Mr. V. Jeganathan, Principal, Shanmuga Vidyalaya, Karaitivu. Mr. S. Kandasamy, Principal, Ramakrishna Mission Boys' School, Karaitivu, welcomed the invitees. Swami Jivanananda blessed the gathering. Swami Ajaratmananda delivered the Centenary Memorial Speech. Mr. V. Kanapathipillai, retired Divisional Education Officer was the Guest Speaker. Children from all the schools in Karaitivu participated.

As part of the Centenary Celebrations , the Kallady - Uppodai Vivekananda Girls' Maha Vidyalaya conducted a procession on 09.05.1997 from the Ramakrishna Mission Boys' Home carrying the portrait of Sri Ramakrishna, the Holy Mother and Swami Vivekananda. There, a meeting was held where leading religious dignitaries, Members of Parliament and Education Department Officials spoke. One hundred boxes of mathematical instruments were distributed to deserving children. Sarees were distributed to 100 ladies from Vivekanandapuram. Certificates were awarded to children who had completed the Leadership Training Workshop conducted by the Ramakrishna Mission, Colombo. Al Haj M.M.M. Mahroof Careem, Principal, Meera Balika Maha Vidhyalaya, Kattankudy also spoke.

On 23rd June 1997, Shri Pe. Su. Mani's Tamil book on the Ramakrishna Movement in Sri Lanka was released. Mr. S. Yogarajah, Senior Lecturer, Eastern University of Sri Lanka, introduced the book with his scholarly review.

Swami Tanmayananda, Secretary, Ramakrishna Mission Vidyalaya, Periya-naickenpalayam, Coimbatore was on a three-day visit from 01/09/1997. He was received at the Ramakrishnapuram Junction, Kallady and conducted in procession along the New Kalmunai Road to the Ashrama. The Swami, after worshipping in the Shrine gave his blessings to the devotees, friends and school children who had gathered to welcome him.

On the second day (02.09.97) the Swami went to Kalmunai, where two well-formed processions in the traditional Hindu manners carrying the portraits of Bhagavan Sri Ramakrishna, The Holy Mother and Swami Vivekananda from Periya Neelavanai and the other from Senaikudiyiruppu converged in Kalmunai. Dignitaries, Swamis of the Mission, Priests and Nuns of the Catholic Church, Principals, Teachers and senior students of schools, Heads of temples and religious institutions, Officials from the Department of Education and the Divisional Secretariats took part in the procession.

Reverend Brother S.A.I. Matthew, S.S.J., Principal, Carmel Fatima National College welcomed the Swamis and garlanded them. Brahmashri K.A. Yogarajah, Temple Priests, Reverend Father Ignatius Joseph representing the Catholic Church, Reverend S. D. Thayaseelan of the Methodist Church, Ven. Gokkralla Thilagasara Thero, Incumbent of the Buddhist Vihara, Kalmunai, Mr.K.M.H. Kalideen, President All - Ceylon Federation of Khathibs, Janab A.L.M. Faleel, Divisional Secretary, Kalmunai and Mr. A. K. Thiagarajah, Divisional Secretary, Tamil Division, Kalmunai graced the occasion. The meeting commenced in the main hall of the Ramakrishna Mission Maha Vidhyalaya , Kalmunai at 10.30 a.m. with the lighting of the traditional oil lamp by the Guest Swami Tanmayananda. The Centenary Souvenir was released by Swami Tanmayananda,

and Swami Ajaratmananda gave a scholarly analysis of the souvenir. After the distribution of prizes by Swami Tanmayananda for winners in the competitions held earlier as part of the Centenary celebrations, he delivered the Centenary Memorial Address. Mr. K. Peethamparam proposed the Vote of Thanks.

On the 3rd day, the Swami inaugurated the classes in the Vivekanandapuram Nursery School.

On 24th & 25th October 1997, the Centenary was celebrated at the Periya Kallar Maha Vidyalaya. On the 24th there was a procession starting at 7.00 a.m. from Sri Sivasubramania Swami Temple carrying the portrait of Sri Ramakrishna through Kallar Oor Veethi and the Main Road to reach Kallar Maha Vidyalaya. On the same day at 9.00 a.m. a Book Exhibition was declared open and continued till 2.00 p.m. the next day after which, a public meeting was held and prizes distributed to the winners of the various competitions conducted by the Centenary Celebration Committee, Periya-Kallar.

Swami Chaityanananda, Vice-President, Hindu Dharma Vidhya Peedam, Vellimalai, Kanyakumari District, Tamil Nadu was here from the 20th to the 23rd April 1998. He spoke at public meetings organised at Kallady - Uppodai, Anaipanthy, Arayampathy and Akkaraipattu.

Swami Jitatmananda, President of the Ramakrishna Mission, Rajkot, Gujarat, was here with us from the 28th August to the 1st September 1998. On 29th August, he participated in a seminar organised by Mr. R. Nagalingam, with Mr.J. Visvanathan, District Judge as Chairman at Anaipanthy. That evening Swami Jitatmananda was in Arayampathy at another seminar organised by the Chairman, Pradeshiya Sabha, Mr. K. Navaratnarajah. On 30th August he presided over a Sat Sangh at our Girls' Home in Karaitivu.

On 31.08.1998, at the express request of the Honourable Joseph Pararasasingham, M.P., the Swami unveiled the tablet of the clock-tower at the Ramakrishnapuram Junction, Kallady at 10.00 a.m. That evening, he was accorded a Civic Reception by the Batticaloa Municipality with His Worship the Mayor Cheliyan J. Perinpanayagam presiding where a galaxy of dignitaries were present. His visit was rounded off with visits to the Vipulananda College of Music and Dance, Shivananda Vidyalaya and Vivekananda Girls' Maha Vidyalaya, Ramakrishnapuram.

Swami Virupakshananda, Secretary, Ramakrishna Mission, Chengalpattu revived old memories when he spent three days with us from the 15th to the 18th September 1998.

NURSERY SCHOOL EXHIBITIONS

An innovation in 1999 was the Exhibition of the Children's handiwork for two days: 9th and 10th July. This drew unprecedented crowds of children from the neighbouring nursery schools. The traffic jam was so acute that the services of the Traffic Police had to be sought.

Swami Tadbhasananda was posted to the Batticaloa Centre and he arrived here on 17th September 1999. He was received at the Ramakrishnapuram Junction, Kallady and conducted in procession by the devotees, friends and school children.

PLATINUM JUBILEE OF THE BOYS' HOME : 06th June 1926 – 06th June 2001

The inaugural meeting of the Platinum Jubilee of the Boys' Home was held on 18th June 2000 (Sunday) in the Vipulananda Memorial Hall presided over by Swami Jivanananda. One hundred and fifty one members attended the meeting. It was decided to have a year-long celebration. Swami Atmaghanananda was unanimously nominated to function as advisor for the successful completion of the Jubilee Celebrations.

The following activities were proposed at the meeting:

1. Release of a commemorative stamp
2. Enhancing facilities at the Swami Natarajananda Students' Home, Sittandi.
3. Book Exhibitions at various places
4. Personality Development seminars for students
5. Publication of a souvenir and a book about the Students' Homes
6. Putting up shelters at bus-halts at Kallady - Uppodai
7. Upgrading the facilities in the schools, once managed by the Ramakrishna Mission
8. Helping to start Nursery schools
9. Rehabilitation activities and free medical camps in the backward areas of Batticaloa District
10. Improvement of the playground at Ramakrishna Mission Sarada Vidyalaya, Karaitivu
11. A mammoth procession and public meeting
12. A model village in the Valaichenia Division, resettling 50 displaced families

Several meetings of the sub-committees had taken place since.

Sri. N. Krishnamoortiji of Vivekananda Kendra, Kanyakumari, was here specially to conduct personality development workshops as part of the Platinum Jubilee Celebrations. The one - day workshops were conducted for selected students in the following places:

1. 20.11.2000 – Vantharamoolai Central College 78 students from 07 schools
2. 21.11.2000 - Vipulananda Memorial Hall, Kallady-Uppodai 67 students from 07 schools
3. 22.11.2000 - Kaluthawalai Maha Vidhyalaya 69 students from 09 schools
4. 23.11.2000 - Kalmunai Wesley College. 59 students from 09 schools
5. 24.11.2000 - Vipulananda Memorial Hall, Kallady - Uppodai. 68 teacher students from 02 institutions.
6. 25.11.2000 - Vivekananda Girls' Vidhyalaya, Kallady-Uppodai. 72 students from 07 schools

The workshops included bhajan, meditation, lectures (Swamiji's Message), group activities, games, questions and answers.

Swamiji's book and picture, Swamiji's Messages in three pamphlets, certificate of participation, eight-page bhajan handouts and an exercise book were distributed to students, while the 39 participating schools were presented with mementos by Shri N. Krishnamoortiji on behalf of the Vivekananda Kendra, Kanyakumari.

Swami Yuktatmananda of the Ramakrishna Mission, Mysore, India was here in connection with the Platinum Jubilee Celebrations from 3rd to the 8th March 2001.

On his arrival in the company of Swami Atmaghanananda, he was received at the clock tower junction of Ramakrishnapuram and conducted in procession to the Ashrama. The Swami, after worshipping in the Shrine blessed all those who were present.

On the 4th March 2001 morning at 9.30 a.m. he declared open the Centre for the Rehabilitation of Handicapped Children in the premises of the Shivananda Vidyalaya Hostel. That evening, Swami Yuktatmananda was taken in procession

from the Arasady clock tower junction to the Mahajana College for a public meeting.

On the 5th March 2001 around 8.15 a.m. he was accorded a reception at the Arayampathy Pradeshiya Sabha Grounds en route to Kaludavalai. At Kaludavalai the Swami was warmly welcomed by the villagers. A seminar for school students around Kaludavalai area was held at the Kaludavalai Maha Vidyalaya.

That evening the Swami presided over the Annual Athletic Meet of Shivananda Vidyalaya

On the 6th March 2001 from 9.00 a.m. to 12.30 p.m. the Swami conducted a seminar for Advance Level Students at the Vipulananda Memorial Hall, Ramakrishnapuram.

On the 7th March 2001, Swami presided over the Sri Ramakrishna Cultural programme at the Sri Ramakrishna Mission Vidyalaya, Kalmunai.

Two hundred and forty Hindu and Christian senior students of the Kalmunai educational zone together with leaders of religious organisations, Priests from Temples, Reverend Brothers and Sisters of the Catholic Church, officials from the Department of Education, teachers from schools and village leaders packed the hall.

The Swamis of the Ramakrishna Mission were welcomed at the Main Street with oriental band by the public of Kalmunai and conducted in procession. The traders of the bazaar received the Swamis with poorna kumbams and garlands. When the procession reached the venue of the meeting the Swamis were accorded a grand reception in the traditional Hindu manner. The Presidential Address was delivered by the Principal of the School, Mr. N. Nagarajah. Swami Jivanananda gave his blessings and Swami Ajaratmananda introduced the visiting Swami Yuktatmananda which was followed by the speech of the Chief Guest.

On the 8th March after visiting Shivananda Vidyalaya, National School around 8.00 a.m., Swami presided over the 166th Birthday celebrations of Sri Ramakrishna at Ananipanthy Vivekananda Girls' Maha Vidhyalaya. He left for Colombo on the same day around 1.00 p.m.

One of the activities in connection with the Platinum Jubilee Celebrations is the conducting of free medical camps in areas where medical care is not available.

The first such camp was held on 24.12.2000 at Mandur Ramakrishna Vidyalaya . 13 medical officers and 02 para medics conducted the camp where 798 patients were treated. They came from far off places like divisions 1, 2 and 3 of Mandur Village, Palamunai, Thambalavattai, Ganeshapuram, Maringaiadipooval, Kurumenveli, Vellavali, Karaitivu, Kalmunai, Ollimadu and Sinnavattai. Rs.22,580/- value of medicines were used at this camp. The members of the Ramakrishna Manram, Mandur were of invaluable assistance.

The 2nd medical camp was conducted at the Maha Vidyalaya, Vakarai on 18.02.2001. 13 medical officers and 02 para medics and 08 nurses served this camp. 1395 patients from Vakarai, Kadiraveli, Paalchenai, Vammivettuwan, Thattumunai, Mankerny, Uryankattu, Kandalady, Ambathanveli, Puliyankandadi, Vellaiadimadu and other villages were treated. The cost of drugs used at this camp amounted to Rs.25,000/=. The Divisional Secretary, Mr. Balasubramaniam rendered valuable service for the success of this camp.

The 3rd medical camp was held at the Mahilavedduvan Maha Vidhyalaya on 29.04.2001. 12 medical officers and 10 nurses served this camp. 1750 patients from the villages of Nellur, Pavatkodichchenai, Karaveddy, Thandiyadi, Navatkadu, Mahilavedduvan, Naripulthottam, Ayithiamalai, Karadianaru, Vilavedduvan, Manipuram, Unnichchai, Pankudaveli, 6th Mile Post, Eachanthivu, Paalakkadu, Siruwamunai,

Mullamunai, Vavunathivu, Kurinchamunai, Annainagar, Kannankudah and Kelithimadu benefited. The cost of medicines used at this camp amounted to Rs.80,000/=. Mr. P. Sangar the Divisional Secretary rendered all assistance to make the camp the success it was.

CONCLUSION

The home by its services has improved the living conditions of many who came under its wings. It has helped inter-community understanding and fostered harmony among them. The direct benefits of the home are well understood by the words of gratitude expressed by the inmates.

Today the Home celebrates its Platinum Jubilee. As predicted by Swami Bigyananandaji Maharaj, it is indeed growing as an institution, dedicated to service of humanity, transcending all human made barriers, spreading the gospel of selfless service.

On this historic occassion we thank all for their kind-hearted co-operation withou which such an achievement of the Home would not have been possible.

* *This is the gist of all worship – to be pure and to do good to others. He, who sees Shiva in the poor, in the week, and in the diseased, really worships Shiva; and if he sees Shiva only in the image, his worship is but preliminary. He who has served and helped one poor man seeing Shiva in him, without thinking of his cast, or creed, or race, or anything, with him Shiva is more pleased that with the man who sees Him only in the temples.*
* *He who wants to serve the father must serve the children first. He who wants to serve Shiva must serve His children - must serve all creatures in the world first*
* *Let me tell you again, that you must be pure and help anyone who comes to you as much as lies in your power. And this is good Karma. By the power of this, the heart becomes pure (Chitta Shuddhi), and then Shiva who is residing in every one, will become manifest.*
* *Self-sacrifice, not self-assertion, is the highest law of the Universe...... Religion comes with intense self-sacrifice. Desire nothing for yourself. Do all for others. This to live and move and have your being in God.*
* *Selfishness is the devil incarnate in every man. Every bit of self, bit by bit, is devil. Take off self by one side and God enters by the other.*
* *Are you unselfish? That is the question. If you are, you will be perfect without reading a single religious book, without going to a single church or temple.*

- Swami Vivekananda

மாணவ இல்லங்களின்

சமகாலக் கலை முயற்சிகள்

– மாஸ்டர் சிவலிங்கம்

கவின் கலை என்பது தனிமனித வெளிப்பாடாக இருக்கும் அதேவேளை சமூகத்தின் நாகரிக, பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் தலை சிறந்த ஊடகமாகவும் மிளிர்கிறது. உயர்ந்த கருத்துக்களை, உயரிய தத்துவங்களை பாலர்களுக்கும், பாமர மக்களுக்கும் இலகுவில் கவின் கலைகள் மூலம் புரியவைத்து விடலாம்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவி, சுவாமி விபுலானந்தர் ஆகியோரின் போதனைகளை மிஷன் இல்லங்களின் மாணவ, மாணவிகள் கவின் கலைகள் மூலம் மக்களுக்குக் குறிப்பாகவும், சிறப்பாகவும் பாலர்களுக்கும், பாமர மக்களுக்கும் புரியவைத்து விடுகின்றனர்.

மிஷனில் நடைபெறும் விழாக்களிலே பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் பெரும்பாலான கலை நிகழ்ச்சிகள் இல்ல மாணவ, மாணவிகளின் பங்களிப்பாகவே இருக்கின்றன.

மேற்படி விழாக்களிலே நாடகம், வில்லுப்பாட்டு, கூத்து, தாளலயம், கதாப்பிரசங்கம், இசையும் அசைவும் போன்ற கவின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவற்றில் இல்ல மாணவ, மாணவிகள் பங்குபற்றுகின்றனர். மேற்படி கலை நிகழ்ச்சிகளில் பலவற்றை எழுதித் தயாரிப்பதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்.

மாணவர் இல்லத்தில் நடைபெறும் விழாக்களிலே மாணவர்களின் கலை நிகழ்வுகளும் சாரதா மகளிர் இல்லத்திலே நடைபெறும் விழாக்களிலே மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன. ஞாயிறு பாடசாலை விழாக்களிலே மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

வில்லுப் பாட்டு:

மாணவர் இல்ல மாணவர்களின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும், சாரதா மகளிர் இல்ல மாணவிகளின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் பல விழாக்களிலே இடம்பெற்றுப் பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

மேற்படி வில்லிசை நிகழ்ச்சிகள் மிஷன் விழாக்களிலே மட்டுமன்றி வெளியூர்களில் நடைபெறும் சமய விழாக்கள், கலை விழாக்கள் சிலவற்றிலும் இடம்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"அன்னை சாரதா தேவி" என்ற சாரதா இல்ல மாணவிகளின் வில்லுப்பாட்டு வெள்ளவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் விழா ஒன்றிலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிறுவர் மலரிலும் இடம்பெற்றது. "அன்னையின் வாழ்வில்" என்ற வில்லுப்பாட்டு ரூபவாஹினி சிறுவர் நிகழ்ச்சியில் இடம்பெற்றுப் பாராட்டுப் பெற்றது. இல்ல மாணவர்களின் "சுவாமி விவேகானந்தர்" என்ற தலைப்பிலான வில்லுப்பாட்டு வானொலி சிறுவர் மலரில் இடம் பெற்றுப் பாராட்டுப் பெற்றது.

தாளலயம்

தாளலயம் - தாளத்திற்கு ஏற்ப மெதுவாக ஆடியசைந்து அபிநயத்தல். இந்நிகழ்ச்சி நாட்டிய நாடகம் போன்று மக்களை இலகுவில் கவர வல்லதாகும்.

சாரதா இல்ல மாணவிகளால் நடத்தப்பட்ட தாளலய நாடகங்கள் பலராலும் வியந்து பாராட்டப்பட்டவையாகும். அவற்றுள் "கண்ணன் காட்சி தந்தான்" என்ற இறை நம்பிக்கையை நன்கு வலியுறுத்தும் தாளலயமும், சமாதானத்தை வலியுறுத்தும் "கிருஷ்ணன் தூது" என்ற தாளலயமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மேற்படி இரு தாளலயங்களும் இல்ல விழாக்களில் மட்டுமன்றி மட்டக்களப்பில் சில முக்கிய விழாக்களிலும் இடம்பெற்றுப் பாராட்டுப் பெற்றவைகளாகும். அவையிரண்டும் வெள்ளவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் விழாக்களிலும் இடம்பெற்றுப் பாராட்டுப் பெற்றவை. "கண்ணன் காட்சி தந்தான்" என்ற தாளலயம் ரூபவாஹினி "வண்ணச் சோலை" சிறுவர் நிகழ்ச்சியில் இடம்பெற்று ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றது.

மாணவிகளின் "ஐயோ பாவம் பத்மா" என்ற தாளலயம் மட்டக்களப்பு சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தால் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி இல்லங்களிடையே 1998ல் நடத்தப்பட்ட போட்டியில் முதலிடம் பெற்றது. கொழும்பில் அதே ஆண்டில் நடைபெற்ற சிறுவர் விழாவிலும் அந்நிகழ்ச்சி சிறப்புப் பரிசு பெற்றது.

மாணவர்களின் "அவதானம்" என்ற தாளலய நாடகம் ரூபவாஹினி சிறுவர் நிகழ்ச்சியில் இடம்பெற்றுப் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கூத்து

மட்டக்களப்பு மக்களின் பழம்பெரும் கலையான கூத்தும் இல்ல மாணவ, மாணவிகளால் ஆடப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது.

குருதேவர் கூறிய தத்துவக் கருத்து ஒன்றை அடிப்படையாக வைத்து "அருச்சுனன் அறிவு பெற்றான்" என்ற கூத்தை சாராதா இல்ல மாணவிகளுக்குப் பழக்கினேன். மிகக் குறுகிய காலத்தில் அவர்கள் அதனைப் பழகிக் கொண்டார்கள்.

அந்தக் கூத்து, மட்டக்களப்பு மிஷன் மணி மண்டபத்திலும், வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷனிலும் மேடையேற்றப்பட்டது. சாரதா இல்ல மாணவிகளின் கலையாற்றலைப் பலர் வியந்து பாராட்டினர்.

மாணவர் இல்ல மாணவர்களும் குரு தேவரின் தத்துவக் கருத்தை விளக்கும் கூத்தில் பங்குபற்றித் தமது ஆற்றலை வெளிப்படுத்தினர். அந்தக் கூத்து மிஷனில் மேடையேற்றப்பட்டதோடு இலங்கை ரூபவாஹினியிலும் இடம்பெற்றது. அதனை திரு. எஸ். வைரமுத்து எழுதித் தயாரித்திருந்தார்.

உடுக்கடிப்பாட்டு

சாரதாதேவியின் வாழ்க்கைச் சுருக்கத்தை உடுக்கடிப் பாடலாக அம்மன் தாலாட்டு இராகத்திலே அருமையாக வழங்கினார்கள் மிஷன் இல்ல மாணவர்கள்.

இதனை எமது சகோதரர் திரு. ஆர். துரைராசசிங்கம் உருவாக்கிருந்தார். திரு. ஆர். என். கணபதிப்பிள்ளை பூசாரியார் மாணவர்களுக்குப் பயிற்சியளித்திருந்தார். மாணவர்களின் உடுக்கடிப் பாடல் நிகழ்ச்சி பலரதும் பாராட்டைப்பெற்றது.

அந்த நிகழ்ச்சி இல்ல விழாவில் மட்டுமன்றி வேறு சில விழாக்களிலும் இடம்பெற்றது. சுவாமி ஆத்மகனானந்தாஜி அவர்கள் ஏற்பாட்டில் கொழும்பிலும் ஒரு வைபவத்தில் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

நவீன நாடகம்

சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கப் பிரசங்கத்தில் இடம்பெற்ற "கிணற்றுத் தவளை" என்ற குட்டிக் கதையை நவீன நாடகமாகத் தந்தார் பேராசிரியர் சி. மௌனகுரு. அந்த நவீன நாடகத்திலே இல்ல மாணவர்கள் பங்குபற்றிச் சிறப்புற நடித்தனர். அந்தக் குட்டி நாடகம் சில மேடைகளில் இடம் பெற்றுப் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது.

நாடகத்தின் கதாநாயகனான கிணற்றுத் தவளை பார்வையாளர் மத்தியில் இருந்து தத்தித் தத்தி மேடையேறி நடித்தது நாடகத்தின் சிறப்பம்சமாகும்.

இல்ல மாணவ, மாணவிகளால் கதாப் பிரசங்கம், பஜனை, கும்மி, கோலாட்டம், காவடியாட்டம், குட்டி நாடகம், உரைச் சித்திரம், இசையும் அசைவும் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

ராமகிருஷ்ண மிஷன், சிவானந்தா தேசிய பாடசாலையில் நடைபெறும் விழாக்களில் இல்ல மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதே போன்று ராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தா மகளிர் கல்லூரியில் நடைபெறும் விழாக்களிலும் இல்ல மாணவிகளின் கலைப் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

சுருங்கச் சொன்னால் மிஷன் இல்ல மாணவ, மாணவிகளின் கலை முயற்சிகள் பற்பல மேடைகளைக் கண்டு பலராலும் பாராட்டப்படும் வகையில் அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது.

மிஷன் இல்ல மாணவர்களினதும், சாரதா இல்ல மாணவிகளினதும் கலை முயற்சிகளுக்குப் பலவிதங்களிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் சுவாமிஜிகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

புளழய௨ புளழய௨ புளழய௨

* *As long as the iron is in the furnace it remains red-hot, but becomes black when taken out of the fire. So with the worldly men. As long as they are in places of worship or in the company of pious people, they are full of religious emotion, but as soon as they lose these associations the flood of devotion leaves them.*

* *One can enter into the world after the attainment of Bhakti. There is no fear of making the hands sticky with the milk of jack, if one rips it after smearing them with oil.*

* *The world is like a water and the mind of man like milk. Milk will mix with water if you put the two together. But turn the milk into curds by letting it stand still in the pot. Then churn it and have butter. Now, if you keep the butter in water, it won't mix with it but float unattached.*

* *A good and experienced Guru does not entrust to a worldly man valuable and exalting precepts, for he is sure to misinterpret and misuse them to suit his own mean designs. Nor will he ask him to do any useful work that may cost a little labour, lest he should think that the preceptor was taking undue advantage of him.*

* *Worldly soul can burst through the meshes of 'Maya' by the wings of 'Viveka' (discrimination) and 'Vairagya' (renunciation).*

* *There are various faiths in the world. As many faiths, so many paths. But everyone thinks his faith alone to be right one, that his own watch alone is going right! But then, however wrong the other watches may be, the sun is going aright! One has to correct all watches by that.*

* *God looks at the workings of one's mind. He does not take into account what in particular a person is doing, or where he is lying. The God recognises the motive alone.*

- ***Bhagawan Sri Ramakrishna***

மாணவர் இல்லங்கள்

– அன்புமணி

1. மக்கள் சேவையே மகேசன் பூசை

சுவாமி விவேகானந்தர் மேற்குலகில் ஆத்மீக மறுமலர்ச்சி ஏற்படுத்தி, நாடு திரும்பும் வழியில் முதலில் தரிசித்த மண் நமது ஈழத் திருநாடு ஆகும். 15.01.1897ல் அவர் இம் மண்ணில் கால் பதித்தார். 10 நாட்கள் தங்கியிருந்து கொழும்பு, கண்டி, மாத்தளை, அனுராதபுரம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் ஆத்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

இச்சொற்பொழிவுகளில், "மக்கள் சேவையே மகேசன் பூசை" என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டது. பின்னர் அவர் இந்தியாவின் பல பகுதிகளிலும் உரையாற்றிவிட்டு கல்கத்தா சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் கருத்துக்களைப் பரப்புவதற்கு ஒரு நிறுவன ரீதியான அமைப்பு அவசியம் என்பதை உணர்ந்து 01.05.1897ல் ராமகிருஷ்ண மிஷனை நிறுவினார்.

மக்கள் சேவையே மகேசன் பூசை என்பது இந்நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கையாக இருந்தது. இலங்கையில் நிறுவப்பட்ட ராமகிருஷ்ண மிஷன், இத் தத்துவத்தின் செயல் வடிவமாக, திக்கற்ற குழந்தைகளுக்கான ஒரு சிறுவர் இல்லத்தை ஆரம்பித்தது.

இவ்வில்லம், வண்ணார்பண்ணையில் வெள்ளிக்கிழமை மடத்தில் 6 சிறுவர்களுடன் 06.06.1926ல் ஆரம்பமானது. பின்னர் இந்த இல்லம் சிறுவர்களுடன் 26.11.1929ல் மட்டக்களப்பு கல்லடி உப்போடைக்கு மாற்றப்பட்டது.

காலப்போக்கில், காரைதீவில் ஒரு மாணவியர் இல்லமும் (1937), மட்டக்களப்பில் ஒரு மாணவியர் இல்லமும் (1951) ஆரம்பிக்கப்பட்டன.

2. மட்டக்களப்பு மாணவர் இல்லம்:

இந்த இல்லம் யாழ்ப்பாணத்தில் இருந்த போது, சுவாமி விபுலானந்தர், சுவாமி அனந்தானந்தர், பிரம்மச்சாரி சிவதாஸ் (பின்னர் சுவாமி பரிபூரணானந்தர்) ஆகியோர் பொறுப்பில் இயங்கியது. மூன்று வருடங்களின் பின் இவ்வில்லம் மட்டக்களப்புக்குக் கொண்டு வரப்பட்டது. இங்கும் சுவாமி விபுலானந்தரே அதைப் பொறுப்பேற்று நடாத்தினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் தலைவராக விளங்கிய சுவாமி சிவானந்தர் அவர்களினதும், மற்றும் உப தலைவராக விளங்கிய சுவாமி விஞ்ஞானானந்தரினதும் ஆசிகள் இந்த இல்லத்துக்குக் கிடைத்தது பெரும் பேறாகும். இவ் இருவருமே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேரடி சீடர்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இந்த இல்லங்களுக்குப் பொறுப்பாக இருந்த சுவாமி விபுலானந்தரும் அவருக்குப் பின் வந்த, பிற சுவாமிகளும் இல்லக் குழந்தைகள் மேல் நிறைந்த அன்பைப் பொழிந்து அவர்களது தேவைகளைக் கவனித்து வளர்த்தார்கள். தனிப்பட்ட முறையில் பாடங்களையும் சொல்லிக் கொடுத்தார்கள்.

காலப் போக்கில் இல்லத்தை நடாத்தும் பொறுப்பு இல்லச் சிறுவர்களிடமே விடப்பட்டது. ஒரு பாராளுமன்ற நடை முறையைப் பின்பற்றி சுவாமிஜீ கவர்னராகவும், அவருக்குக் கீழ் இல்ல மாணவர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதம மந்திரி, சுகாதார மந்திரி, உணவு மந்திரி, கல்வி மந்திரி முதலியோரும் விடுதியை நடாத்தும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நடைமுறை இல்ல மாணவரிடையே தன்னம்-பிக்கை, நிர்வாகத் திறன்,

துணிவு, ஆளுமை, ஆற்றல் முதலியவற்றை வளர்க்கப் பெரிதும் உதவியது.

3. சுவாமிகளின் பணிகள்:

75 வருடங்களுக்கு முன் இப்பிரதேசம் காடு மண்டிக்கிடந்தது என்பதையும், வசதிகள் மிகக் குறைவாக இருந்தன என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். எனவே அந்தக் காலத்தில் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் இவ் இல்லத்தை நடாத்தி, குழந்தைகளை வளர்த்தெடுப்பதென்பது மிகப் பிரயாசையான காரியம் ஆகும். இப்பணி-யைச் செவ்வனே செய்த சுவாமிகளை நாம் என்றும் மறக்க முடியாது.

அக்காலத்தில் இந்த இல்லத்தில் வாழ்ந்த சிறுவர்கள் பலர் இன்று சமூகத்தில் நல்ல நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் தாம் பெற்ற அனுபவத்தை வாழ்நாளில் மறக்க முடியாத பொக்கிஷமாக நினைவுகூர்கின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் ஆற்றிய பணிகள் தனிக் கட்டுரையாக எழுதப்பட வேண்டியவை. இவர்களுள் சுவாமி நடராஜானந்தர், சுவாமி ஜீவனானந்தர் ஆகியோரைப்பற்றி விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

சுவாமி நடராஜானந்தர் அவர்கள் சுவாமி விபுலானந்தரின் மருகர். சீனிவாசகம் என்ற பெயருடன் அவருடன் இணைந்து செயற்பட்டவர். சுவாமி விபுலானந்தர் சிவானந்த வித்தியாலயத்தின் அதிபராகவும் இல்லத்தின் பொறுப்பாளராகவும் இருந்த போது சீனிவாசகம் சிவானந்த வித்தி-யாலயத்தின் விஞ்ஞான ஆசிரியராக இருந்தார். பின்னர் அவர் ராமகிருஷ்ண சங்கத்தில் இணைந்து துறவியானார். இவர் காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகள் அதிகரித்தன. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளாக அவை அரசாங்கத்தில் பதிவு பெற்றன.

இந்த மிஷன் பாடசாலைகளின் முகாமை-யாளராகவும் அவர் பணி ஆற்றினார். மாணவரில்ல மேற்பார்வையைத் திறம்படச் செய்தார்.

4. புதிய மாணவர் இல்லம்:

சுவாமி நடராஜானந்தரின் மறைவின் பின்னர் சுவாமி ஜீவனானந்தர் மாணவ இல்லங்களின் பொறுப்பாளராக கடமையாற்றி வருகின்றார். இவர் காலத்தில், மிஷன் நடவடிக்கை களில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. 1972ல் இல்லச் சிறுவர்-களுக்காக ஒரு பெரிய கட்டிடம் நிறுவப்பட்டது. (இதுவே இன்றுள்ள மிஷன் இல்லமாகும்). நிதி-வசதி குறைந்த அக்கால கட்டத்தில் இவ்வாறான நாற்சார்பு கட்டிடம் நிறுவப்பட்டது இமாலய சாதனையாகும்.

இதில் முன்புறம் நூலகம், அலுவலக அறைகள் முதலியனவும், இருபுறமும் இல்ல மாணவர்கள் தங்குவதற்கு வசதியான மண்ட பங்களும் நடுவில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்-கான ஆலயமும், பின்புறம் சாப்பாட்டு அறை, சமயலறை முதலியனவும் இடம் பெற்றுள்ளன. மிகக் கோலகலமாக நடைபெற்ற இப்புதிய கட்டிடத் திறப்பு வைபவம், மட்டக்களப்பு ஸ்ரீ ராம-கிருஷ்ண மிஷன் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

இந்த இல்லம் உருவான பின்னர், மட்டக் களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் இன, மத பேதமற்ற செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில், பல பிரமுகர்களின் கவனத்தை ஈர்த்தது. இல்ல வளர்ச்-சிக்கான அன்பளிப்புக்களும் அதிகரித்தன. இவ்-வில்லத்திற்கு ஒருமுறை விஜயம் செய்பவர்கள் அதைத் தம் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவ-மாகக் கொள்கின்றனர்.

வெளிநாட்டுப் பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள், அமைச்சர்கள், அரசாங்க அதிபர்கள், இந்தியாவிலிருந்து வருகை தரும் ராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் முதலியோர் தமது எண்ணங்-களை இம் மிஷனில் உள்ள விருந்தினர் குறிப்பேட்டில் (Visitors' Book) பொறித்துவைத்-துள்ளனர். அவை ராமகிருஷ்ண மிஷன் மாணவ இல்ல நடைமுறைகளுக்கும், அதன் ஆன்மீக செயற்பாடுகளுக்கும் சிறந்த சான்றுகளாக அமை-கின்றன.

5. கரைதீவு சாரதா மகளிர் இல்லம்:

விபுலானந்தர் காலத்தில் கல்வி பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டபோதும் பெண்கள் கல்வி பற்றிய விழிப்புணர்வு அவ்வளவாக ஏற்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், விபுலானந்தர் பிறந்த ஊரான காரைதீவில், பெண்களுக்கான பாடசாலை அமைப்பது பற்றியும், பெண்களுக்கான இல்லம் ஏற்பாடு செய்வது பற்றியும் மக்கள் சிந்தித்தனர். ராமகிருஷ்ண மிஷனுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இதற்கான காணியை அன்பளிப்பாக வழங்கவும் அவர்கள் தயாராக இருந்தனர்.

அதன் பயனாக, காரைதீவில், ஸ்ரீ சாரதா மகளிர் வித்தியாலயம் என்ற பெயரில் 15.01.1929ல் ஒரு பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 31.01.1937ல், பெண்களுக்கான இல்லம் திறக்கப்பட்டது. சேர். வைத்தியலிங்கம் துரைசாமி இந்த இல்லத்தைத் திறந்து வைத்தார்.

மேற்படி வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின் காரைதீவைச் சேர்ந்த பெண்கள் பலர் இப் பாட சாலையில் சேர்ந்ததுடன், அவர்களுள் ஆதர-வற்ற பெண்கள் சாரதா மகளிர் இல்லத்திலும் தங்கியிருந்து கல்வி கற்றனர். இவ்வில்லம் ஏற்கனவே இருந்த வீடு ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாணவர் இல்லத்தில், ஏற்படுத்தப்பட்ட வசதிகள் இங்கும் ஏற்படுத்தப்பட்டன. பெண்களுக்கான தையல், தோட்ட வேலை, மனையியல் கைப்பணி முதலிய பல்வேறு பயிற்சிகளும் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனுக்கு வரும் சுவாமிகள் காரைதீவிற்கும் சென்று இந்த இல்லத்தைப் பார்வையிட்டு, இல்லக் குழந்தைகளை ஆசீர்வதித்துச் செல்வது வழக்கம். இத்தகைய ஊக்குவிப்பினால் மக்களும் இவ்வில்லத்தில் அக்கறை செலுத்தினர், உதவிகளை வழங்கினர், அதனால் இல்ல நடவடிக்கைகளும் வளர்ச்சிபெற்றன.

பின்னர் சுவாமி ஜீவனானந்தஜி மகராஜ் அவர்களின் முயற்சியால் இவ்வில்லத்திற்கு புதியதொரு கட்டிடம் அமைக்கப்பட்டது. இதனை ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தஜி அவர்கள் 27.05.1994ல் திறந்து வைத்தார்.

6. மட்டக்களப்பு சாரதா மகளிர் இல்லம்

காரைதீவில் ஆதரவற்ற மாணவிகளுக்கென இல்லம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் சென்ற பின்பே மட்டக்களப்பில் மாணவிகளுக்கான இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்த இல்லம் கல்லடி உப்போடையில் அமையாது, மட்டக்களப்பு நகரில் அமைந்ததும் குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே திரு.வி.நல்லையா, டொக்டர்.சி.சபாபதி ஆகியோரால் நிறுவப்பட்ட "விபுலானந்த மந்திர்" என்னும் கட்டிடத்தில் இவ்வில்லம் சுவாமி நடராஜானந்தர் அவர்களால் 09.05.1951ல் திறந்து வைக்கப்பட்டது.

இந்த இல்லம் ஆரம்பிக்கப்பட்டதும், காரைதீவு மாணவியர் இல்லத்திலிருந்த 22 மாணவிகளும் இந்தப் புதிய இல்லத்திற்கு மாற்றப்பட்டனர். சில காலத்தின் பின்னர் இவர்கள் மீண்டும் காரைதீவு இல்லத்திற்கு அனுப்பப்பட்டனர்.

அக்காலத்தில் மட்டக்களப்பில் பெண்களுக்குரிய ஆங்கிலப் பாடசாலைகளாக கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் பாடசாலையும், ஆனைப்பந்தி ராமகிருஷ்ண மிஷன் பெண்கள் வித்தியாலயமும் இயங்கி வந்தன.

கல்லடி மகளிர் பாடசாலை 15.02.1926 முதல் ராமகிருஷ்ண மிஷனால் பொறுப்பேற்று நடத்தப்பட்டது. 30.01.1937ல் ஆனைப்பந்தி ராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை திரு. வைத்திலிங்கம் துரைசாமி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால் பெண்களுக்குரிய இல்லம் 1951ல் தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இடைவெளி அப்போதைய கல்விச் சூழலை ஒருவாறு எடுத்துக் காட்டுகிறது. ராமகிருஷ்ண மிஷனின் காரைதீவு மகளிர் இல்லத்தைப் போலவே இவ்வில்லத்திலும் மாணவிகளுக்கு வேண்டிய தையல், தோட்ட வேலை, மனையியல், கைப்பணி முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

சுவாமி ஜீவனானந்தஜியின் முயற்சியால் இவ்வில்லத்திற்குப் பெரிய அளவில் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. இதனை ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜி அவர்கள் 03.06.1985ல் திறந்து வைத்தார். அதனோடு இணைந்ததாக அன்னை சாரதாதேவி ஆலயமும், ஒரு கலாசார மண்டபமும் அமைக்கப்பட்டன. இவற்றை ஸ்ரீமத் சுவாமி பிரபானந்தஜி அவர்கள் 03.12.1993ல் திறந்து வைத்தார்.

7. குருகுல வாழ்க்கை:

மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் நடாத்துகின்ற மூன்று இல்லங்களிலும், மாணவ மாணவியரை முழு மனிதர்களாக உருவாக்கும் பணி நடைபெறுகிறது என்றால் அது மிகையாகாது. அன்பு, பணிவு, தயை, தன்னலம் ஒறுத்தல், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சுயதேடல், சுத்தம் முதலிய நற்பண்புகள் இளம் வயதிலேயே இவர்கள் உள்ளத்தில் விதைக்கப்படுகின்றன. அதனால் அன்பும், பண்பும் நிறைந்தவர்களாக அவர்கள் உருவாகின்றனர்.

காலை நாலரை மணி முதல் இரவு ஒன்பது மணி வரை, இவர்களது ஒரு நாள், நன்கு திட்டமிடப்பட்ட முறையில் வகுக்கப்பட்டுள்ளது. காலையில் யோகப் பயிற்சி, பிரார்த்தனை, படிப்பு, மாலையில் தோட்ட வேலை, விளையாட்டு, பிரார்த்தனை, படிப்பு என்ற வகையில் ஒரு நிமிடமும் வீணாகாதவாறு இவர்களது நாளாந்த செயற்பாடுகள் அமைந்துள்ளன.

கல்வி என்பது வெறுமனே புத்தகப் படிப்பு அல்ல, அது ஒருவரது ஆளுமை உருவாக்கம் (Character Building & Man Making) என்ற சுவாமி விவேகானந்தரின் கல்வித் தத்துவத்துக்கமைய இல்லச் சிறுவர்களும், சிறுமிகளும் உருவாக்கப்படுகின்றனர்.

அனாதைகள் என்ற தாழ்வு மனப்பான்மையோடு இவ்வல்லத்தில் சேரும் குழந்தைகள் காலப் போக்கில், தாம் அனாதைகள் அல்ல, கடவுளின் குழந்தைகள் என்ற அசைக்க முடியாத பெருமிதத்தையும், மன உறுதியையும் பெறுகின்றனர்.

இவர்களுக்கு இல்லத்துச் சுவாமிகளே தாயும், தந்தையும் ஆகின்றனர். சுவாமிகள் பெற்றோரையும் விட அதிகமான அன்பைப் பொழிகின்றனர். நல்ல முறையில் அவர்களை வளர்த்தெடுத்து, பிரகாசமான ஒரு எதிர் காலத்துக்கு அத்திவாரம் இடுகின்றனர்.

8. இல்லங்களின் செயற்பாடுகள்:

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனால் நிர்வகிக்கப்படும் மூன்று இல்லங்களும் சமுதாயத்துக்கு முன்னுதாரணமான இல்லங்களாகும். இவ்வில்லங்களின் செயற்பாடுகளை நேரில் கண்ட அன்பர்கள், இவ் இல்லங்களுக்கு அன்பளிப்புகளை வழங்குகிறார்கள்.

ஆனால் முழுக்க முழுக்க அன்பளிப்புக்களில் தங்கியிருக்காமல் மிஷன், பல தொழில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிடலாம்.

அ) காய்கறித் தோட்டம்:

இல்லங்களுக்கு தேவையான காய்கறிகளை, மாணவர்களே உற்பத்தி செய்கின்றனர். தேவைக்கு அதிகமாகக் கிடைக்கும் காய் கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆ) பூந் தோட்டம்:

மூன்று இல்லங்களிலும் அழகான பூந்தோட்டங்கள் உள்ளன. மாணவரில்லத்தில் பூங்கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இ) றூகம் விவசாயப் பண்ணை:

நாட்டில் இனக்கலவரம் ஏற்பட்ட 1983 வரை இப்பண்ணையில் இருந்து இல்லங்களுக்குத் தேவையான அரிசி முதலியன பெறப்பட்டன. இப்போது இம்முயற்சி தடைப்பட்டுள்ளது.

இவ்வில்லங்களின் ஏனைய செயற்பாடுகள்:

அ) தொழில் பயிற்சி:

தச்சு வேலை, மின், கணினி முதலியவற்றில் இல்லச் சிறார்கள் அவ்வப்போது பயிற்சி பெறுகின்றனர்.

ஆ) கலை நிகழ்ச்சிகள்:

மிஷன் நடாத்தும் முக்கிய வைபவங்களிலும், பிற கலாச்சார நிகழ்ச்சிகளிலும், இல்லக் குழந்தைகள் அளிக்கும் கலை நிகழ்ச்சிகள் பலரது பாராட்டையும் பெற்று வானொலி, ரூபவாஹினியிலும் இடம் பெறுகின்றன.

இ) சமய, சமூக நிகழ்வுகள்:

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர், ஆகியோரது நினைவு தினங்கள், கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன.

9. இன மத வேற்றுமை கடந்த மனிதநேயம்:

சுவாமி விவேகானந்தரின் உயரிய கோட்பாட்டின் வழி ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் செயற்படுகிறது. "ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!!" என்று திருமூலர் கூறினார். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் "எம்மதமும் சம்மதம்" என்ற தத்துவத்தைப் போதித்துள்ளார். அதன் அடிப்படையிலேயே ராமகிருஷ்ண மிஷனின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இத் தத்துவம் போதனையாக மட்டும் இல்லாமல் சாதனையாக இடம் பெறுவதை இந்த இல்லங்களில் காணலாம்.

இந்து, பௌத்த, கிறிஸ்தவ விசேட தினங்கள் இங்கே அனுஷ்டிக்கப்படுகின்றன. உண்மையில் இறைவனுக்கு மதம் இல்லை. மதத்தை உண்டாக்கியவன் மனிதனேயன்றி இறைவன் அல்ல. இறைவனின் குழந்தைகளாகிய மனிதர்களை இந்து, கிறிஸ்தவன், பௌத்தன், இஸ்லாமியன் என்று பெயரிட்டுப் பிரித்தது மனிதன்தான் - இறைவன் அல்ல.

இந்தப் பாகுபாடுகளை தகர்க்கிறது வேதாந்தம். இந்த வேதாந்த தத்துவத்தின் அடிப்படையிலேயே ராமகிருஷ்ண மிஷன் இயங்குகிறது. அதுவே இவ்வில்லங்களிலும் பின்பற்றப்படுகிறது. இன, மத வேற்றுமை கடந்த மனித நேயமே இங்கு போதிக்கப்படுகிறது. இதற்கான சான்றுகள் மூன்று வகையாக உள்ளன. அவை-

அ) இல்லங்களில் இருந்து வெளியேறி, சமுதாயத்துடன் கலந்துவிட்ட பெருமக்களின் அப்பழுக்கற்ற வாழ்க்கை.

ஆ) இல்லங்களை நேரில் தரிசித்துப் பெறும் அனுபவங்கள்.

இ) இல்ல நடவடிக்கைகளைப் பார்வையிட்ட பிரமுகர்கள் மனம் திறந்து எழுதியுள்ள பார்வையாளர் குறிப்புகள்.

(ஒருசிலவற்றைப் பார்த்தல் தகும்)

10. பார்வையாளர் எண்ணப்பதிவுகள்:

அ) சுவாமி பவித்திரானந்தா, அத்வைத ஆஸ்ரமம், மாயவதி, இமாசலம் (06.02.1945):- இங்கு நடைபெறும் ஒவ்வொரு செயற்பாட்டையும் இறைவனே நிறைவேற்றுகிறான் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

ஆ) முன்னாள் இந்தியத் தூதுவர் திரு. வி. வி. கிரி (18.01.1949):- இந்நிலையம் ஏனைய நிறுவனங்களுக்கு ஒரு முன் மாதிரியாக உள்ளது. சுத்தமும், புனிதமான பழக்க வழக்கங்களும் குறிப்பிடத்தக்கவை. இங்கு வழங்கப்படும் பயிற்சி மிகவும் உயர்ந்தது. இன, மத வேறுபாடுகள் எதுவும் இங்கில்லை.

இ) பிரேமதாச உடுகம, முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் (01.06.1972):- இங்கு வாழும் குழந்தைகளின், சுத்தம், எளிமை என்பன இவர்களுள் சிறந்த ஆளுமையை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. இங்குள்ள சுவாமிகளின் வழிகாட்டலில் இவர்கள் இப் பயிற்சியைப் பெறுகிறார்கள்.

ஈ) கிறிஸ்தோபர் வான் ஹொலன் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் (09.08.1973):- இம் மிஷனின் தோற்றமும், இங்குள்ளவர்களின் அர்ப்பணிப்புச் சிந்தையும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. இது ஒரு சிறப்பான நிறுவனம்.

உ) எல்.எச்.டி.அல்விஸ் முன்னாள் மட். மேல் நீதிமன்ற நீதியரசர் (17.08.1975):- இம் மிஷனைப் போன்று சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு நிறுவனத்தை இலங்கையில் எப்பாகத்திலும் நான் கண்டதில்லை. ஒழுங்கு, கட்டுப்பாடு, சுத்தம், புனிதம் என்பன எங்கும் காணப்படுகின்றன. அழகிய மலர்த் தோட்டம் ஒரு புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது போல் பளிச்சென்று இருக்கின்றது. ஆன்மீகப் பயிற்சியும், நடைமுறை வாழ்க்கையும் இரண்டறக் கலந்து பரிணமிக்கின்றன. இது எனக்கு ஒரு அற்புதமான அனுபவமாகும்.

ஊ) திரு.ரி.ஜே.இராஜரத்தினம் முன்னாள் மேல் நீதிமன்ற நீதியரசர் (28.06.1977):- இம்மிஷன் தன்னலமற்ற சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு சுவாமியால் நடாத்தப்படுகின்றது. இல்லக் குழந்தைகள் யாவரும் ஒழுங்கும், ஒழுக்கமும், சிறந்த கல்வியறிவும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இங்குள்ள சுவாமி பிள்ளைகளுக்கு நல்ல உணவை மட்டுமல்லாது அதற்கு மேலான அன்பையும் பாசத்தையும் ஊட்டி வளர்க்கின்றார்.

11. இல்லப் பராமரிப்பு:

தற்போது (2001ல்) 3 இல்லங்களிலும் வதியும் மாணவ, மாணவியரின் விபரம்:

மாணவர் இல்லம்	**- 86**
மகளிர் இல்லம் (மட்டக்களப்பு)	**- 92**
மகளிர் இல்லம் (கரைதீவு)	**- 38**
மொத்தம்:	**216**

தற்போது இவ்வில்லங்களில் ஒரு குழந்தையைப் பராமரிப்பதற்கு, மாதம் ரூபா 2000.00 செலவாகிறது. பல அன்பர்கள் தமது பிரியத்துக் குரியோர் நினைவாக அல்லது பிறந்தநாள் அன்பளிப்பாக அவ்வப்போது இத்தொகையை வழங்கி வருகின்றனர். வேறு சிலர் இல்லக் குழந்தைகளுக்கு ஆகும் ஒருவேளை அல்லது ஒருநாள் உணவுக்கான செலவை வழங்கியும் வருகின்றனர்.

12. சுவாமிகளின் ஆசீர்வாதம்:

ராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளிலும் மும்மணிகளான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவியார் ஆகியோருடைய அருட்கடாட்சம் மறைமுகமாகச் செயற்படுகின்றதென்பது மறுக்கமுடியாத உண்மை. மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனுக்கும், அம் மிஷன் மேற்கொள்ளும் சகல பணிகளுக்கும் இது பொருந்தும். அதற்கும் மேலாக அவ்வப்போது இந்தியாவிலிருந்து வருகை தரும் சுவாமிகள் வழங்கும் ஆத்மார்த்தமான ஆசிகளும் இப்பணிகளுக்குத் துணைபுரிகின்றன.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களான சுவாமி சிவானந்தர், சுவாமி விஞ்ஞானானந்தர் ஆகியோருடைய அருட்பார்வை இம்மிஷனுக்குக் கிடைத்தது என்பதை முன்னர் குறிப்பிட்டோம். இவர்களுள் சுவாமி விஞ்ஞானானந்தர் வழங்கிய ஆசி ஒரு மந்திர சக்திபோல் இன்றும் செயற்படுகின்றது எனலாம். ஆரம்ப நாட்களில் மிஷன் நடவடிக்கைகள் மந்தமடைந்திருந்த ஒரு கால கட்டத்தில் சுவாமி விஞ்ஞானானந்தர் இம் மிஷனுக்கு 03.01.1934ல் வருகை தந்திருந்தார். அப்போது அவர் இங்கு இருந்த ஒரு மாமரத்தின் கீழ் நின்று கொண்டு இரு கைகளையும் அகலமாக விரித்தவாறு, “இந்த நிறுவனம் இவ்வாறு வளரும்! இவ்வாறு வளரும்!! இவ்வாறு வளரும்!!!” என்று உரத்த குரலில் கூறினார். அவ்வார்த்தைகளை இன்றும் சுவாமி ஜீவனானந்தஜி மகராஜ் அடிக்கடி கூறுவார். அவரது வருகைக்குப் பின் இம்மிஷனின் நடவடிக்கைகள் துரிதவளர்ச்சி கண்டன.

அன்று முதல் இன்று வரை அவ்வப் போது ராமகிருஷ்ண சங்கத்து சுவாமிகள் இந்தியாவிலிருந்து இம் மிஷனுக்கு வருகை தருவார்கள். அவர்களுக்கு உரிய வரவேற்பு அளிக்கப்படும். அப்போது மட்டக்களப்பு நகரமே ஒரு புத்துணர்ச்சி பெற்றது போன்று காட்சியளிக்கும். வரும் சுவாமிகள் மிஷன் நடாத்தும் மூன்று இல்லங்களுக்கும் சென்று இல்லக் குழந்தைகளுக்கு ஆசி வழங்குவர். அதுவே இவ்வில்லக் குழந்தைகளுக்கு உந்து சக்தியாக விளங்குகின்றது.

13. அரவிந்த ஆசிரமச் செயலாளர் ஸ்ரீ எம்.பி. பண்டிட் கூற்று:

இம்மிஷனுக்கு வருகை தந்த ஆன்மீக ஞானிகளுள் பாண்டிச்சேரி ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தின் பொதுச் செயலாளர் ஸ்ரீ எம்.பி. பண்டிட் பகிரங்கமாகக் கூறிய ஒருசெய்தி இங்கு நினைவுகூரத்தக்கது. இம்மிஷனில் ஒரு வாரத்துக்கு மேல் தங்கியிருந்து, அதன் செயற்பாடுகளை நேரில் அவதானித்து உள்ளம் நெகிழ்ந்து போனார் அவர்.

13.02.1977ல் அவர் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் ஒரு உரையாற்றினார். அந்த உரையின் முன்னுரையாக அவர் கூறியது:-

“மட்டக்களப்பில் நான் இருந்த போது, எனக்குக் கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பையிட்டு இங்கு கூற விரும்புகிறேன். அது ராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜி நடாத்தும் சிறுவர் இல்லத்தைத் தரிசித்ததுதான்.

இது போன்ற எத்தனையோ சிறுவர் இல்லங்களை நான் பார்த்திருக்கிறேன். அவ்வாறே பல ஆன்மீகவாதிகளையும் நான் சந்தித்திருக்கிறேன். ஆனால் இங்கு நான் கண்ட உண்மை, இங்கு நான் பெற்ற அனுபவம், இங்கு நான் அடைந்த உள்ளக்

கிளர்ச்சி தனித்துவமானது. இங்கு நடைபெறும் மகத்தான ஆத்மீகப் பணி என்னை உலுக்கி-விட்டது. மட்டக்களப்பிலே ஒரு தங்க மனிதர் இருக்கிறார். இவர் எல்லா வகையிலும் உங்கள் சமூகத்தின் பெருமைக்குரியவர். வாழ்க்கையில் ஆன்மீகம் இணையும் போது, அது சிறந்த எதிர்-காலத்தை உருவாக்கும் என்பதற்கு இவரே பிரத்தி-யட்ச உதாரணமாகத் திகழ்கிறார்.

அவர் நடாத்தும் சிறுவர் இல்லத்தைப் பல-முறை சுற்றிப் பார்த்து, அங்கு உலவும் குட்டி மனிதர்கள் சுதந்திரப் பறவைகளாகச் சுற்றித் திரிவதைப் பார்த்து உளம் பூரித்தேன். இது போன்ற காட்சியை நான் வேறெங்கும் கண்டதில்லை. சுவாமி விவேகானந்தரின் ஆன்மீகப் பாதையை நியாயப்படுத்தும் வகையில் இந்த நிறுவனம் அமைந்துள்ளது.........''

இவ்வாறு இன்னும் பல யதார்த்த ரீதியான பாராட்டுக்களை அவர், சுவாமி ஜீவனானந்தஜி மேலும், அவர் தலைமையில் இயங்குகின்ற இல்லங்கள் மீதும் அவர் வழங்கியுள்ளார்.

14. சுவாமி ஜீவனானந்தஜி மகராஜ்:

ராமகிருஷ்ண மிஷனில் தனி மனிதத் துதி-க்கு (Hero Worship) இடமில்லை. ஆனால் வரலாற்று-ப் பதிவுக்காக அவர் தனி மனிதனாக நின்று ஆற்றிய பாரிய பணிகளை - இமாலய சாதனைகளை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தர் அவர்கள் 17.03.1967 முதல் இம்மிஷனைப் பொறுப்பேற்று நடாத்தி வருகிறார். சுமார் 35 வருடங்கள் - மிஷன் நிர்வாகத்தில் மிக நீண்ட காலம். இதை ஒரு தெய்வ சங்கல்பம் என்றே கருத வேண்டியுள்ளது. ஏனெனில் இவர் காலத்தில்தான்:-

அ) மூன்று இல்லங்களுக்கும் பாரிய, விசாலமான புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டன.

ஆ) உறுகாமம் வயல், பண்ணை, ஸ்ரீராமகிருஷ்ணர் குளம் - அணைக்கட்டு, வாய்க்கால் என்பன உருவாக்கப்பட்டன. (இதைப்பற்றித் தனியான, விரிவான கட்டுரை எழுத வேண்டும்.)

இ) விவேகானந்தபுரம் என்ற புதிய குடியிருப்பு உருவாக்கப்பட்டது.

ஈ) தச்சு வேலைப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

உ) ஸ்ரீ ராமகிருஷ்ணபுரம் என்ற நகர் அமைந்தது.

ஊ) விபுலானந்த இசை நடனக் கல்லூரிக்கு பல ஏக்கர் மிஷன் காணி அன்பளிப்புச் செய்யப்-பட்டது. (இல்லையென்றால் இசை நடனக் கல்லூரி இங்கு அமைந்திருக்காது.)

எ) கணினிப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

ஏ) அரச திணைக்களங்களின் அரவணைப்பு பெறப்-பட்டது.

ஐ) வெளிநாடு சென்ற அன்பர்களிடம் இருந்து அன்பளிப்புக்களும், அறக் கட்டளைகளும் கிடைத்தன.

ஒ) அனைத்து மக்களின் நல்லெண்ணமும், நன்மதிப்பும் பெறப்பட்டன. அதுவே மிஷனின் அசைக்க முடியாத முதலீடு ஆகும்.

ஒருமுறை இம்மிஷனுக்கு வருகை தந்து, இல்லங்களைப் பார்வையிடும் ஒருவர் ஒரு தனி மனிதனால் இது எவ்வாறு சாத்தியமாயிற்று என அசந்து போகின்றனர். இதன் மர்மம் என்ன? பார்ப்போம்.

15. ஆன்மீக ஆற்றல்:

சுவாமி விவேகானந்தர் கூறினார் *“Manifest the divinity within your self. The rest will harmoni-ously surround it” (உன்னுள் இருக்கும் தெய்வீகத்தை பிரகாசிக்கச் செய், ஏனைய யாவும் அதைச் சுற்றிவந்து அமையும்).* இதுவே சுவாமி ஜீவனானந்தஜியின் காரிய சாதனைகளுக்கு அத்திவாரமாகும்.

“கடமையைச் செய், பலனை பகவானுக்கு அர்ப்பணித்து விடு'' என்பது பகவத்கீதை காட்டும் பாதை. அப் பாதையிலேயே சுவாமி ஜீவனானந்தஜி நடை போடுகிறார்.

மிஷனுக்கு வருகை தரும் பல இந்திய சுவாமிகள் இவரை “நடமாடும் தெய்வம்'' என்றும், “நடமாடும் கோயில்'' என்றும் பலமுறை பகிரங்க மேடைகளில் கூறியுள்ளனர். ஆனால்

“பணியுமாம் என்றும் பெருமை - சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து”

என்ற குறள் வாசகத்தைக் கடைப் பிடிக்கும் சுவாமிஜி அவை யாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணித்து விடுகிறார். இதுவே அவரது பலமும் ஆகிறது.

இந்த நிறுவனத்தில் அரசியல் துளியும் கிடையாது. அரசியல்வாதிகள் வருகை தரும் போது, சுவாமிஜீயின் முன் “ஆன்றவிந்தடங்கிய” மனிதர்கள் ஆகிவிடுகின்றனர்.

சமயம் பற்றிய பேச்சுக்கே இங்கு இடமில்லை. ஆன்மீகம் ஒன்றே இங்கு செயற்படுகிறது. (Spirituality is different from Religion). ஆகவே இங்கு எம்மதமும் சம்மதம் ஆகிறது. சகல மதத்தினரும் மிஷனைப் போற்றுகின்றனர். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மூன்று முக்கிய வாசகங்களைக் கூறினார். அவை:-

அ) **The World is One** (உலகம் ஒரு குடும்பம்)

ஆ) **As many faiths so many paths** (எத்தனை நம்பிக்கைகள் உண்டோ, அத்தனை சமயங்கள்)

இ) **Bow down in reverence to what others hold sacred** (மற்றவர் புனிதமாகக் கருதுவதற்கு நீ தலை வணங்கு)

இம் மூன்று வாசகங்களினதும் செயற்பாட்டை நேரில் தரிசிக்க வேண்டுமானால், மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் நடாத்தும் மூன்று இல்லங்களுக்கும் ஒருமுறை நேரில் விஜயம் செய்தல் தகும்.

புளழய௨ புளழய௨ புளழய௨

* *There is no treasure equal to contentment and no virtue equal to fortitude.*

* *Don’t be afraid. Human birth is full of suffering and one has to endure everything patiently, taking the name of God. None, not even God in human form, can escape the sufferings of the body and mind. Even Avataras, saints, and sages have to undergo the ordeal of suffering, for they take upon themselves the burden of sins of omission and commission of ordinary human beings and thereby sacrifice themselves for the good of humanity.*

* *One who makes a habit of prayer will easily overcome all difficulties and remain calm and unruffled in the midst of the trials of life.*

* *Certainly you will have doubts. There will be questionings and faith will return again. That is how faith is established.*

* *Is faith so cheap, my child? Faith is the last word. If one has faith, the goal is practically reached.*

* *God cannot be realised without love. Yes, sincere love.*

* *Even the impossible becomes possible through devotion.*

* *As long as a man has desires there is no end to his transmigration. It is the desires alone that make him take one body after another. Rebirth is inevitable so long as one has desires.*

- Holy Mother Sri Sarada Devi

ஒரு விடியலின் குறியீடு
"விவேகானந்தபுரம்"

– காசுபதி நடராசா

1. கருவும் உருவும்

"எவனுடைய இதயம் ஏழைக்காக இரங்குகிறதோ அவனை நான் மகாத்மா என்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே ஆவர். நான் தத்துவ ஞானியுமல்ல; ஆத்ம ஞானியுமல்ல; நான் ஏழை, ஏழைகளையே நேசிக்கின்றேன் அவ்வளவுதான்"

– சுவாமி விவேகானந்தர்

இக் கருவின் உருவே விவேகானந்தபுரம். சுவாமி விவேகானந்தர் மேற்கு நாட்டு விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பும் வழியில் ஈழத் திருநாட்டில் 1897 ஜனவரி 15ம் நாள் திருவடி பதித்தார்.

இந்த நிகழ்வின் நூற்றாண்டு நிறைவு நாடெங்கும் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. பல நிகழ்வுகள் இடம்பெற்றன. கொழும்பு மாநகரில் அரசாங்கம் முத்திரை வெளியிட்டது. அங்குள்ள நிறுவனங்கள் சுவாமிகளின் முழு உருவ வெண்கலச் சிலையை நிறுவின. நினைவு மலர்கள் வெளியிடப்பட்டன. உலகளாவிய ராமகிருஷ்ண சங்கத்தின் மூத்த துணைத் தலைவராக அப்போது இருந்து, இன்று அதன் தலைவராகத் திருப்பணியாற்றும் ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜி மகராஜ் அவர்கள் தலைமையில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மட்டக்களப்பிலும் சுவாமிஜியின் இலங்கை விஜயம் காத்திரமான வகையில் நினைவு கூரப்பட்டது. பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், கருத்தரங்குகள் முதலியன பிரதேசத்தின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றன.

இவ்வரிசையில் மட்டக்களப்பில் அமைக்கப்பட்டதே "விவேகானந்தபுரம்" மாதிரிக் கிராமம். சேரிவாழ் மக்கள் குழு ஒன்றின் குடிசை வீட்டுத் தொகுதி, நிலையான வீடு, கிணறு, மலசல கூட வசதிகளுடன் கூடிய மாதிரிக் கிராமமாக மாற்றியமைக்கப்பட்டது. 1997 மே மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக் கிழமை இந்த விவேகானந்தபுரம் மாதிரிக் கிராமம் அந்த மக்களிடம் கையளிக்கப்பட்டது. இதன் மூலம் "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைக்குச் செயலுரு கொடுக்கப்பட்டது.

2. அறிமுகமும் பின்னணியும்

மட்டக்களப்பு மாநகரின் தென்பால், கல்லடி உப்போடை, நொச்சிமுனை, நாவற்குடா மரபுவழிக் கிராமங்களையும், கிழக்கு நோக்கிய வேலூர் கொலனி, சிவானந்த வித்தியாலயம், சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆகியவற்றையும் ஒருங்கே உள்ளடக்கியது ஸ்ரீ ராமகிருஷ்ணபுரம் ஆகும். இதை அடுத்து விவேகானந்தபுரம் மாதிரிக் கிராமம் அமைந்துள்ளது.

விவேகானந்தபுரம் மூன்று ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. 1990ல் ஏற்பட்ட வன்செயல் நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட சுகாதார தொழிலாளர்களின் தற்காலிக வதிவிடங்களைக் கொண்ட குடிசைத் தொகுதி இது. இவர்களில் பலரிடம் அரச காணி உறுதிப் பத்திரங்கள் சொந்தமாகக் கையளிக்கப்பட்டிருந்தும் நிலையான வீடுகள் கட்டிக்கொள்ள முடியாத வறுமை நிலை இவர்களை வாட்டியது.

3. பிரச்சினைகளும் தீர்வும்

இக்குடியிருப்பில் வாழும் சுகாதாரத் தொழிலாளர் குடும்பங்களில் 22 உதவி பெறத் தகுதியுள்ளதாக மண்முனை வடக்கு பிரதேச செயலகம் இனங்கண்டது. இவர்கள் தமது அன்றாட சீவியத்துக்கே வழியில்லாதவர்கள். கூலித் தொழில்

செய்தே இவர்கள் வாழ்க்கையை நடத்தினர். இவர்களில் 11 குடும்பங்கள் மாத்திரம் அரச உதவி பெறும் குடும்பப்பதிவு அட்டை பெற்றிருந்தன. மிகுதி 11 குடும்பங்களுக்கு அதுவும் இல்லை. வாழ்க்கைச் செலவு ஏறிக்கொண்டு செல்லும் நிலையில் இவர்கள் தமக்கென நிரந்தர வீட்டினை அமைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். இந்நிலையில் இவர்கள் "நொராட்" உதவித் திட்டம் மூலம் வீட்டு வசதி உட்பட ஏனைய வசதிகளையும் எதிர்பார்த்திருந்தனர்.

கஷ்ட நிலையிலுள்ள இவர்களையும் சமுதாய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டிய தார்மீகக் கடப்பாடு உதவி வழங்கும் சமூக நிறுவனங்களுக்கு இருந்தது. வீடு, மலசல கூடம், கிணறு, மின் இணைப்பு, வீதி முதலிய வசதிகள் இவர்களுக்குத் தேவையாக இருந்தது.

4. சிந்தனையும் செயற்பாடும்

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை பயனுள்ள பணி ஒன்றின் மூலம் நினைவுகூர விரும்பியவர் மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மூத்த தலைவர் சுவாமி ஜீவனானந்தஜி மகராஜ் அவர்கள். அதற்குத் துணையாக நின்றவர் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜி மகராஜ் அவர்கள். இவர்களின் சிந்தனையில் உருவானது "விவேகானந்தபுரம்" மாதிரிக் கிராமம்.

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி மகராஜ் அவர்கள் இத்திட்டத்தைப் பெரிதும் வரவேற்று ஆக்கமும், ஊக்கமும் அளித்ததால் மிகக் குறுகிய காலத்தில் இந்த மாதிக் கிராமத்தை அழுகுறு பொலிவுடன் நிறைவேற்றி முடித்தார் சுவாமி ஜீவனானந்தஜி மகராஜ். இத் திட்டத்தின் செயலாக்கக் கூறுகளை அரச நிறுவனங்களும், தொண்டர் நிறுவனங்களும் பொறுப்பேற்று நிதியுதவிகள் வழங்கின.

இதில் முக்கிய பங்களிப்புச் செய்தது நொராட் நிறுவனம், மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாநகர சபை, கட்டிடத் திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம், கல்வித் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம், மட்டக்களப்பு ஒருங்கிணைந்த புனர்வாழ்வு, புனரமைப்பு செயற்திட்ட நிறுவனம் (BIRRP), கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் கழகம், விவசாயத் திணைக்களம் முதலிய நிறுவனங்களும், தனிப்பட்ட நிறுவனங்களும், தொண்டர் அமைப்புகளும் மறைமுகமான பங்களிப்பைச் செய்துள்ளன.

5. வீடும் பிற வசதிகளும்

விவேகானந்தபுரம் மாதிரிக் கிராமத்தில் உள்ள குடியிருப்பு வசதிகளின் விபரம் பின்வருமாறு:

வகை	தொகை
வீடுகள்	27
கிணறுகள்	27
மலசல கூடங்கள்	27
சமூக மண்டபம்	01
பாலர் பாடசாலை	01
சிறுவர் விளையாட்டரங்கு	01
வீதிகள்	06
ஆலயம்	01
மின்னிணைப்பு	01
சிறுவர் பூங்கா	01

இக்குடியிருப்பு அமைப்பதில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூபா **3,373,386/=** ஆகும்.

மேற்படி வசதிகள் ஒவ்வொன்றுக்கும், பிற நிறுவனங்கள் வழங்கிய நிதி உதவிகளுடன் குறை நிரப்பு நிதியாக ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் கணிசமான தொகையை வழங்கியுள்ளது. முழுச் செலவும் மிஷனைத் தாக்காதவாறு, பல்வேறு நிறுவனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து மேற்படி செயற்திட்டத்தை பூர்த்தி செய்த பெருமை சுவாமி ஜீவனானந்தஜி மகராஜுக்கு உரியது. அவர் பணிப்புரைகளை சிரமேற்கொண்டு நாளும், பொழுதும் பணிபுரிந்த மிஷன் தொண்டர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

6. நிறைவு

இன்று விவேகானந்தபுரம் குடியிருப்புக்களுடன் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தை நடுநிலைப்படுத்தி பாலர் பாடசாலை, சன சமூக நிலையம் முதலானவற்றை உள்ளடக்கி ஒரு வளர்நிலை மாதிரிக் கிராமமாக காட்சி தருகின்றது. மக்கள் சேவையை இறைபணியாகக் கொண்டு செயலாற்றும் மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் சமூகப் பணிகளுக்கு இது ஒரு மாதிரிப் படிமம்.

புளழய௨ புளழய௨ புளழய௨

"Religion is not in books, nor in theories, nor in dogmas, nor in talking, not even in reasoning. It is being and becoming."

"Selfishness is the chief sin, thinking of ourselves first. He who thinks, 'I will eat first, I will have more money than others, and I will possess everything'; he who thinks, 'I will get to heaven before others, I will get Mukti before others', is the selfish man. The unselfish man says, 'I will be last, I do not care to go to heaven, I will go to hell, if by doing so I can help my brothers.' This unselfishness is the test of religion."

"I do not believe in a God or religion which cannot wipe the widow's tears or bring a piece of bread to the orphan's mouth."

"Doing good to others out of compassion is good, but the Seva (Service) of all beings in the spirit of the Lord is better."

"It is our privilege to be allowed to be charitable, for only so we can grow. The poor man suffers that we may be helped.; let the giver kneel down and give thanks, let the receiver stand up and permit. See the Lord back of every being and give to Him."

"Doing work is not religion, but work done rightly leads to Freedom. In reality all pity is darkness, because whom to pity? Can you pity God? And is there anything else? Thank God for giving you this world as a moral gymnasium to help your development, but never imagine you can help the world"

"Who will give the world light? Sacrifice in the past has been the Law, it will be, alas, for ages to come. The earth's bravest and best will have to sacrifice themselves for the good of many, for the welfare of all."

"This life is short, the vanities of the world are transient, but they alone live who live for others, the rest are more dead than alive."

சுவாமி விபுலானந்தரின் சமய, கல்வி, கலாசாரப் பணிகள்

- பேராசிரியர் சி. தில்லைநாதன்

சுவாமி விபுலானந்தரின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் அவர் மேற்கொண்ட கருமங்களையும் ஒன்றுசேர நோக்குமிடத்து, ஒருவிடயம் சந்தேகத்துக்கிடமின்றித் துலாம்பரமாக விளங்கும். அது யாதெனில், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற அவருடைய ஆர்வத்தின் விளைவானவையே அவரது பணிகள் அனைத்தும் என்பதாகும். மக்கள் யாவரும் ஆன்மீக விளக்கமும் நல்லறிவும் பெற்றவர்களாகவும், ஏனையவர்களிடத்து ஆர்வம் மிகுந்தவர்களாகவும், உலகுடன் இணங்கி வாழும் இயல்பினராகவும், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் தன்மையினராகவும் விளங்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவ்விருப்பத்தின் விளைவாக வாய்த்தவையே அவரது சமய, கல்வி, கலாசாரப் பணிகளாகும்.

வங்கிகளையும் தொழிற்சாலைகளையும் கம்பனிகளையும் மையமாகக் கொண்ட நாகரிகத்தில் பணத்தையும் அதிகாரத்தையும் தேடும் வேட்கையில் தார்மீகத்தை மனிதர்கள் தொலைத்துவிட்ட நிலை, மனிதரிடத்துச் சிரத்தை கொண்ட சுவாமி விபுலானந்தரின் உள்ளத்தை உறுத்தியது. போட்டியும் பொறாமையும் மிகுந்துவிட்ட நிலையில், மனித ஆத்மாவின் ஆக்கச் செயற்பாடுகள் மந்தமடைவதையும், அழகின் இடத்தை அவலட்சணம் ஆக்கிரமித்துக் கொள்வதையும் அவர் கண்டார். விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாகக் கண்டு பிடிக்கப்பட்ட கருவிகளிற்பல மனிதகுல அழிவுக்குத் துணை போவதனாலும், சமய நிறுவனங்கள் பணத்தையும் அரசியலாதிக்கத்தையும் சார்ந்து ஊன்றிய நலன்களை வளர்த்துக் கொள்வதனாலும் மனிதகுலத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப் பற்றி அவர் சிந்தித்தார்.

"செவ்வனே ஒழுங்கமைக்கப்பட்டதும் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதுமான ஒரு சமூகத்திலே தான் சமூகப்பிராணியான மனிதன் பூரணவாழ்வை அடைய முடியும்" என்பதை அவர் விளங்கிக்கொண்டார். இணக்கமும் ஒற்றுமையும் அற்றவிடத்து மனிதனின் பெறுமதிமிக்க உடைமைகளையும் இன்பங்களையும் பாதுகாப்பதோ உறுதிப்படுத்துவதோ இயலாததாகிவிடும் என்பதையும் அவர் உணர்ந்தார். அந்நிலையில், மனிதரிடை நிலவிய பேதங்கள் அனைத்தையும் புறங்கண்டு ஒற்றுமையை வளர்ப்பதும் ஆன்மீக அடிப்படையில் மனித சமூகத்தைப் புனருத்தாரணம் செய்வதும் அவசியமென்று கருதிய சுவாமி விபுலானந்தர் அப்பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார். சமயமும் கல்வியும் கலைகளும் அப் பணிகளை முன்னெடுக்க உதவக்கூடியவை என்றும் உதவ வேண்டும் என்றும் அவர் நம்பினார்.

சுவாமி விபுலானந்தரின் சமயப் பணிகளைச் செவ்வனே விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், சமயத்தையும் அதன் தாத்பரியத்தையும் பற்றிய அவரது நிலைப்பாட்டைப் புரிந்துகொள்வது இன்றியமையாததாகும். மனிதரிடத்துள்ள முரட்டுத்தனமான இச்சைகளையும் கோப தாபங்களையும் கட்டுப்படுத்தி, அவனது ஆக்கபூர்வமான வெளிப்பாடுகளுக்கான பன்முகப்பட்ட பாதைகளை வகுத்து, அவனைச் சமூகமயப்படுத்த உதவிய ஒன்றாகச் சமயவரலாற்றை அவர் கண்டார். தனிமனிதனதும் மனித சமூகத்தினதும் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் ஆற்றல் மிக்க ஒன்றாகவும் சமயத்தைக் கண்ட அவர் அதனை விளக்குவதற்கும் முன்னெடுப்பதற்குமான பல்வகைப் பணிகளில் ஈடுபட்டார்.

மனிதப் பெறுமானத்தையும் மனிதனிடத்துள்ள தெய்வீகத்தையும் வலியுறுத்தியதும், சமயத்தின் பேரால் மனிதர் மத்தியில் தோன்றிய முரண்பாடுகளை விலக்கி உலக சகோதரத்துவத்தை வளர்க்க விழைந்ததும், வீழ்ந்துபட்ட மக்களை விழித்தெழவைக்க உறுதி பூண்டதுமான இராமகிருஷ்ண இயக்க-

த்துடன் சுவாமி விபுலானந்தர் தன்னை இணைத்துக் கொண்டார். அந்த இயக்கத்தையும் அவரையும் பொறுத்தவரை சமயம் உலக மானிடத்தை ஒன்றாக நோக்க வேண்டும்; அன்பினைப் பெருக்க வேண்டும்; அயலவர் மீதான ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்; ஆதரவற்றவர்களிடத்தும் எளியவர்களிடத்தும் அருளினை வளர்க்க வேண்டும்.

மனித சமூகத்திலே வேற்றுமைகளையும் பகைமைகளையும் தோற்றுவிப்பவை பேராசையும் அச்சமும் என்று கூறும் சுவாமி விபுலானந்தர், அவற்றைக் கட்டுப்படுத்திக் கலாசாரச் சீரழிவுகளைத் தடுக்க உள்ளவழி ஆத்மீக விழிப்புணர்ச்சியே என்றும், அவ்வாத்மீக விழிப்புணர்ச்சிக்கு உதவுவது சமயமே என்றும் உறுதியாக நம்பினார். சமயம் வாதிடுவதற்கும் சண்டையிடுவதற்கும் உரிய ஒன்றல்ல; அனுட்டிப்பதற்கு உரியது என்று வற்புறுத்தினார். அனுட்டிப்பது என்றால் ஆசாரங்களையும் சடங்கு சம்பிரதாயங்களையும் பேணுவதல்ல. பெருங்கருணைப் பேராறாக இறைவனைக் காண்பது, அவனால் படைக்கப்பட்ட மக்கள்ளனைவரையும் ஒக்கமதிப்பது, அவர்களுடைய மேம்பாட்டுக்காக முயல்வது, மனத்துக்கண் மாசினை அகற்றுவது - இவற்றையே அவர் வலியுறுத்தினார். “உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்பது அவரது வாக்கு.

ஒருவரை ஒருசமயத்தில் இருந்து இன்னொரு சமயத்துக்கு மாற்றுவது சுவாமி விபுலானந்தருக்கு உடன்பாடானதன்று. எல்லாச் சமயங்களையும் வாழ வழிகாட்டுபவையாக அவர் ஏற்றுக்கொண்டார். ஒருவர் தன் பிறப்போடும் வாழ்வோடும் பண்பாட்டோடும் ஒட்டிய சமயத்தை ஒதுக்கி இன்னொன்றைச் செவ்வனே அனுட்டிப்பது சிரமமான காரியம் என்று அவர் கருதினார். அவ்வாறான செயலைத் தாய்மொழியைப் புறக்கணித்துப் புதியதொரு மொழியைப் பயில எத்தனிப்பதற்கு அவர் ஒப்பிட்டார்.

இறையியல்பு, வேதாந்தம், சித்தாந்தம், சைவம், வைணவம் முதலான சமயச் சார்பான விடயங்கள் பலவற்றைப் பற்றிச் சுவாமி விபுலானந்தர் ஏராளமான கட்டுரைகளையும் குறிப்புக்களையும் எழுதியுள்ளார். அவற்றைப் பொதுப்பட நோக்குமிடத்து, உலகத்தோடிணங்கி ஒற்றுமையோடு வாழும் வழியினை விளக்குபவையாக அவை தோன்றுகின்றன. விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளிலெல்லாம் எத்தகைய முன்னேற்றங்கள் காணப்பட்டவிடத்தும், வெகுஜன ஊடகத் தொடர்பாடல்கள் மிகுந்த உலகம் ஒரு கிராமமாக மாறிவருவதாகக் கூறப்பட்ட போதிலும், நாடுகளும் இனங்களும் மக்களும் இணங்கி வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள்தானும் தென்படவில்லை. உலகக் கிராமத்தைப் பற்றிப் பேசிய பேராசிரியர் மார்ஷல் மக்லூகன் அக்கிராமத்தில் இணக்கப்பாடு நிலவும் என்று கூறவில்லை. பன்முகப் பட்ட உலகில் இணங்கி வாழும் நிலை உருவாகும் வரை அமைதிக்கும் பாதுகாப்புக்கும் வழியில்லை. எனவே, சரியான உலக விளக்கத்தையும், அதன் அடிப்படையிலான இணக்கத்தையும் வளர்க்க வலிய முயற்சிகளை மேற்கொண்ட சுவாமி விபுலானந்தர் போன்றோருடைய பணிகளும் சிந்தனைகளும் பெறுமதிமிக்கனவாகும்.

நாட்டின் பல பகுதிகளில் ஆசிரியராகவும், இராமகிருஷ்ண சங்கக் கல்வி நிலையங்களின் முகாமையாளராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினதும் இலங்கைப் பல்கலைக்கழகத்தினதும் முதற் தமிழ்ப் பேராசிரியராகவும், கல்வி ஆய்வுக்குழு, பாடவிதான சபை, பரீட்சைச் சபை போன்றனவற்றின் உறுப்பினராகவும் விளங்கிச் சுவாமி விபுலானந்தர் கல்வித்துறையில் ஆற்றியபணிகள் அளப்பரியனவாகும். ஆளுமையையும், நல்லொழுக்கத்தையும், மனவலுவையும், தன்னம்பிக்கையையும் வளர்ப்பது கல்வி என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். அவரது வழியைக் கடைப்பிடித்த சுவாமி விபுலானந்தர் வாழ்க்கையின் மர்மத்தை அறிந்துகொள்வதற்கும், உள்ளத்தையும் உடலையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும், சமூகத்தோடு பொருந்தி வாழ்வதற்கும், ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கும், சமரச சமத்துவ உணர்வினை வளர்ப்பதற்கும் உதவுவதாகக் கல்வியைக் கண்டார். சமயக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, பெண்கல்வி, அழகியற் கல்வி, உடற்கல்வி, மொழிக் கல்வி, பல்கலைக்கழக கல்வி எனப் பல விடயங்களைப் பற்றி அவர் தெளிவோடு பேசினார்.

வாழ்நாள் முழுவதும் கல்வியை ஒருவன் தொடரவேண்டும் என்றும், சிந்தனைத் தெளிவையும் வாக்குத் தெளிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், கற்றவற்றைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். உண்மையான ஒரு கல்விமான், மனிதர் மத்தியில் ஓர் இளவரசனைப் போல விளங்குவான் என்றும், செல்லுமிடமெல்லாம் வலிமையையும் தூய்மையையும் அவன் பரவச் செய்வான் என்றும், நன்மையின் சக்தியாக அவன் விளங்குவான் என்றும் சுவாமி விபுலானந்தர் கூறினார். "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்று பாடிய புலவரை (கணியன் பூங்குன்றன்) உண்மையான ஒரு கல்விமான் எனப் போற்றியுள்ளதிலிருந்து கல்விமான் பற்றிய அவரது கணிப்பினை அறிந்து கொள்ளலாம்.

"மன்னுயிரனைத்தினையும் தன்னுயிர் போலக் கருதுகின்ற நற்குணத்தை இளம்பிராயத்திலேயே நிலைபெறச் செய்ய வேண்டும்" என்று கூறிய சுவாமி விபுலானந்தர், சிறுவர் கல்வி பற்றி மிகுந்த அக்கறை செலுத்தினார். பெற்றோர் அவருக்குச் சூட்டிய எஸ். மயில்வாகனம் என்ற பெயரில் 1914ல் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி ஆண்டுமலரில் பயிற்சி பெற்ற ஓர் ஆசிரியராக இருந்தபோது அவர் ஆங்கிலத்தில் எழுதிய முதற் கட்டுரையே அதற்குப் போதிய சான்றாகும். ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், குழந்தைகளின் இயல்புகளைப் பரிவோடு புரிந்துகொண்டு ஆசிரியர்கள் அவர்களை எவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் என்பது பற்றியும், ஆரோக்கியமும் உற்சாகமும் அளிக்கும் இதமான சூழலின் தேவை பற்றியும், மொழிக் கல்வி (தாய்மொழியும் ஆங்கிலமும்), ஒழுக்கக் கல்வி, சமயக் கல்வி ஆகியவற்றின் இன்றியமையாமை பற்றியும் தெளிவான கருத்துக்கள் அக்கட்டுரையிற் கூறப்பட்டுள்ளன.

பிள்ளைகளுக்கு இசைவான சூழலில் மிகுந்த பரிவோடு கல்வி ஊட்டப்பட வேண்டுமென்று சுவாமி விபுலானந்தர் கருதினார். அந்தவகையில், கல்வியின் வாயிலாக மனிதர்களை உருவாக்கும் பணியில் ஓர் ஆசிரியர் பெறும் முக்கியத்துவம் குறித்தும், அவருக்கு இருக்க வேண்டிய ஆற்றல்கள், பண்புகள் குறித்தும் சுவாமி விபுலானந்தர் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். "எதைக் கற்பிக்கிறார் என்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஓர் ஆசிரியர் எவ்வாறு கற்பிக்கிறார் என்பதுமாகும்". என்று அவர் வலியுறுத்தினார்.

சுவாமி விபுலானந்தர் தாய்மொழி மூலமான கல்வியை வற்புறுத்தியதற்கான முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று, கற்பவனின் சுயசிந்தனை வளர்ச்சிக்கு அது கூடிய அனுகூலமாய் அமையும். இரண்டு, அவனுடைய சமூகம் அதனால் கூடிய பயனைப் பெறக்கூடியதாய் இருக்கும். "இவன் தாய்மொழியிற் கல்வி பயின்றவனாதலாற் தன்னூர்க்குச் சென்றதும் தான் பெற்ற செல்வத்தைப் பிறரும் அனுபவிக்கும்படி கொடுக்கிறான். இதனால் இவன் பயின்ற கல்வி ஆயிரமடங்கு பயன்தருகிறது. நம் நாட்டில் வறியோர் கொடுக்கும் வரிப்பணத்தைக் கொண்டு உயர்தரக் கல்விச்சாலைகள் நடத்தப்படுகின்றன. ஆதலால் இக்கல்விச் சாலைகளினின்று பிறக்கும் கலையறிவு அனைவர்க்கும் பயன்தருவதன்றோ நீதியும் மரபுமாகும்" என்ற அவரது கூற்று, 'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்ளக்' கல்வி உதவ வேண்டும் என்ற சுவாமி விபுலானந்தரின் வேட்கையை வெளிப்படுத்துவதாகும். "தனது தாய்மொழியை இயல்பாகவும் செம்மையாகவும் பயன்படுத்தக் கூடியவனாக ஆகும்வரை ஒருவன் உண்மையான கலாசார முடையவனாதல் ஒருபோதும் இயலாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

கலாசாரம் என்றால் என்ன? மனிதர்களால் ஆக்கிக்கொள்ளப்பட்டவை அனைத்தும் கலாசாரத்தின்பாற்படும் என்று சிலர் கூறுவர். ஆனால், மனிதரால் ஆக்கப்பட்டவை யாவும் மனித சமூகத்தின் ஆக்கத்துக்கு உதவுபவையாக உள்ளனவா? அழிவுக்கு வழிகோலுபவற்றைக் கலாசாரங்களெனப் போற்றுவோமா? தன்னுடைய தேவைகளை நிறைவேற்ற மனிதன் உருவாக்கிக் கொண்ட சமயம், அறிவு, கலைகள், சட்டங்கள், சம்பிரதாயங்கள், சமூக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வீதிகள், உறையுள்கள், உடைகள் முதலான வற்றை உள்ளடக்கியது கலாசாரம் என்று கூறப்படுகின்றது. கலாசாரத்துக்குப்

பல்வேறு வியாக்கியானங்கள் கூறப்பட்டாலும், பொதுவாக ஒரு சமுதாயத்தின் கலைகளையும், அறிவாக்கங்களையும், அவற்றிலே துலங்குவனவும் போற்றத்தக்கனவெனக் கொள்ளப்படுவனவுமான வாழ்க்கை விழுமியங்களையும் குறிப்பதாக அதனைக் கொள்ளவியலும்.

சுவாமி விபுலானந்தரைப் பொறுத்தவரை, வாழ்க்கையின் உயர் விழுமியங்களை எய்துவதற்கு இன்றியமையாத பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் அடைய மனிதர் கூடி மேற் கொண்ட நடவடிக்கைகளே கலாசாரமாம். உயர் விழுமியங்கள் என்று அவர் கருதியவை உண்மை, நன்மை, அழகு என்பனவாகும். எமது கலைகளிலும் நாம் கற்பவற்றிலும் அவை வெளிப்படுவதைக் காணலாம். உடலையும் உள்ளத்தையும் ஆத்மாவையும் செம்மைப்படுத்தும் செல்வாக்குக் கலைகளுக்கு இருப்பதாகக் கருதியதனாலேயே சுவாமி விபுலானந்தர் இயல் இசை நாடகத் துறைகளில் ஈடுபட்டார். சிருஷ்டிக் கலைகளைச் சமயத்தின் பணிப் பெண்கள் என்றும் வர்ணித்தார்.

எளிமையான வாழ்வு, உயர்ந்த நோக்கம், சமரச சகோதரத்துவ மனப்பாங்கு, ஒன்றே தெய்வம் என்ற நம்பிக்கை, வேற்றுமையில் ஒற்றுமை காணும் தன்மை போன்றவற்றைப் பாரத நாட்டின் பெருமைகள் என்று அவர் விதந்துரைத்தார். உயர் விழுமியங்களை அடைய வேண்டுமாயின், வறுமை, அறியாமை, அநீதி, கொடுங்கோன்மை ஆகியவை ஒழிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார். பின்தங்கிய பகுதிகளுக்குக் கல்வி அறிவினையும் ஆத்மீக விளக்கத்தையும் கொண்டு சென்றார். காலத்துக்கேற்ற முன்னேற்றம் கருதி விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆங்கில அறிவு வளர்ச்சிக்காகப் பல பணிகளை ஆற்றினார். வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை வளர்க்க உழைத்தார்.

தொகுத்து நோக்குமிடத்து, மனித சமூகத்தில் உண்மை, நன்மை, அழகு ஆகியவற்றைக் காணவிழைந்தவரும், அதற்குச் சமயமும் கல்வியும் உதவும் என உறுதியாக நம்பியவருமான சுவாமி விபுலாநந்தர் மேற்கொண்ட தன்னலங் கருதாத வலிய முயற்சிகளால் எங்கள் கலாசாரம் செழுமை பெற்றது எனலாம்.

புளழய௨ புளழய௨ புளழய௨

* *தீய சொல் பேசுவதை விட மௌனம் சிறந்தது.*
* *எக் காரணத்தை முன்னிட்டும் மனிதன் பொய் பேசலாகாது. பொய் பேசிப் பழகுபவன் படிப்படியாகப் பாவம் செய்வதற்கு அஞ்சாத கீழான மனப்பான்மையைப் பெற்றுவிடுகிறான்.*
* *நம்பிக்கையும் உறுதியுமே அடிப்படை. இவை இரண்டும் இருந்தால் எல்லாம் இருந்த மாதிரித்தான்.*
* *நீ எந்த இடத்தில் இருந்தாலும், மகிழ்ச்சியுடன் இருக்கும் வகையில் உன் மனத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.*
* *குழந்தாய், நம்பிக்கை ஒன்றே முற்று முடிவான நிலையாகும். ஒருவனிடம் நம்பிக்கை இருக்குமானால் அவன் தன்னுடைய குறிக்கோளை அடைந்த மாதிரித்தான்.*
* *போதுமென்ற மன நிறைவுக்கு நிகரான செல்வம் எதுவுமில்லை. பொறுமைக்குச் சமமான பண்பு வேறில்லை.*

- தூய அன்னை சாரதா தேவி